தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 28, சனிக்கிழமை.

பங்குனி 14, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 216 முதல் 220 வரை, மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

வில்லிவாக்கம் தொகுதி சூரப்பேட் குடிநீர்த் திட்டம்.

216—(*வினா எண் 8113) திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் சூரப்பேட் குடிநீர் வழங்கும் திட்டத்தின்படி, குழாய்கள் போடப்பட்டு, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் அந்தத் திட்டம் முடிவடையவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டத்தை முடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இத்திட்டத்திற்கான இறுதி பணி மதிப்பீடுகள் தயாரிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் இத்திட்டம் முடிவடையாமல் உள்ளது. திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை.

217—(*வினா எண் 9141)—**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையில் கரும்புக்கு, அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கொடுக்கப்படுகின்ற விலை கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அது இந்த ஆண்டுக்கும் பொருந்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம், பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலையில் அலங்காநல்லூர் ஆலைப் பகுதியிலிருந்து பெறப்படும் கரும்பிற்கு மட்டும், அலங்காநல்லூர் ஆலைக்கு மாநில அரசு தரும் கரும்பு விலையான டன் ஒன்றுக்கு ரூ. 247.50 அளிக்கப்படுகின்றது.

(ஆ) இது 1985-86 அரவைப் பட்டத்திற்கு மட்டும் பொருந்தும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, 10 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற இரண்டு சர்க்கரை ஆலைகளில் ஒரு சர்க்கரை ஆலையிலே கூடுதலான விலையும் பக்கத்திலே அதே வட்டத்திலே இருக்கிற மற்றொரு சர்க்கரை ஆலையிலே வேறுவிதமான விலையும் மிகுந்த வேறுபாடுடன் இருப்பதற்கு என்ன காரணம்? அந்த நிலையைப் போக்குவதற் காக அடிப்படை விதிகள் தளர்த்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.